ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 4 | டிசம்பர் 1998 | கானம் : 5

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி


(தெய்வீக மாதப் பத்திரிகை)


வேணு : 4 டிசம்பர் 1998 கானம் : 5


## விஷய ஸூசிகை

பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர் - 37 | 4 |
| 3. | நக்ஷத்ரங்களின் பெருமைகளும், விளக்கங்களும் - 18 | 6 |
| 4. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 8 |
| 5. | வேத கதைகள் - 19 | 10 |
| 6. | ஸ்ரீ நாரத பக்தி ஸூத்ரம் - 9 | 12 |
| 7. | எந்தரோ மஹானுபாவுலு - 7 | 17 |
| 8. | மஹாபாரதக் கதைகள் | 21 |
| 9. | ஸ்ரீமத் ராமாயணத்தில் தர்மம் | 23 |
| 10. | பாலகர்களுக்கு ஒரு கதை - 13 | 27 |
| 11. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 40 | 29 |
| 12. | செய்திகள் | 31 |
| 13. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |



ஸ்ரீ ஸ்வாமிகளின் திருநக்ஷத்திரத்தன்று ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாளின் திவ்ய அலங்காரம்

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : நவரஸ கானடா தாளம் : ஆதி

பல்லவி

*உன்னத குருமண்டலம் பஜாமி - ஸந்ததம் (உன்னத)*

சரணங்கள்

*1. த்ருவராஜம் அஹம் நமாமி*
*தேஹி மே தவ தபஸித்திம்*

*2. த்வைத தோஷரஹித பரதம் நமாமி*
*தேஹி மே தவ வைராக்யம்*

*3. பக்த அஜாமிளம் அஹம் நமாமி*
*தேஹி மே அந்திம ஸ்மரணம்*

*4. பாலக ப்ரஹ்லாதம் அஹம் நமாமி*
*தேஹி மே தவ விஸ்வாஸம்*

*5. பாகவத கஜேந்த்ரம் அஹம் நமாமி*
*தேஹி மே தவ ப்ரபன்ன லக்ஷணம்*

*6. ஸார்வபௌம பலிம் அஹம் நமாமி*
*தேஹி மே தவ த்யாகம்*

*7. ஸாது அம்பரீஷம் அஹம் நமாமி*
*தேஹி மே தவ விநயம்*

*8. பாக்ய கோபீஜனான் அஹம் நமாமி*
*தேஹி மே பவதாம் ப்ரேமரஸம்*

*9. உத்ஸாஹ உத்தவம் அஹம் நமாமி*
*தேஹி மே தவ தாஸ்ய பக்திம்*

*10. முரளீதரம் அஹம் நமாமி*
*தேஹி மே தவ தர்ஶனம்*

## 37

சேங்கனூரில் யாமுனாஸூரி என்கின்ற வைஷ்ணவோத்தமர் வாழ்ந்து வந்தார். அவருக்கு ஸர்வ ஶாஸ்த்ரங்களும் அறிந்த, மஹாதேஜஸ்வியான ஒரு குமாரர் இருந்தார். அவருக்கு ஸ்ரீ க்ருஷ்ணஸூரி என்ற திருநாமம். இவர்களுடைய குலதெய்வம் திருவேங்கடமுடையான். இவர்கள் சிறந்த விஷ்ணு பக்தி உடையவர்களாக இருந்து வந்தார்கள். ஒரு ஸமயம், தனது மனைவியுடன் ஸ்ரீ கிருஷ்ணஸூரி திருமலை யாத்திரை மேற்கொண்டார்.

திருமலையில் பெருமானின் திவ்ய திருமேனியை தரிசித்த பிறகு, பிரிய மனமில்லாமல் அழுது புலம்பினார். திரும்பவும் ஊர் செல்ல அவருக்கு மனம் வரவில்லை. தன்னுடைய ஆயுட்காலம் முழுவதும் திருமலையிலேயே தங்கியிருக்க தீர்மானித்திருந்தார். ஆனால் பகவானோ ஒரு ப்ரஹ்மச்சாரி வடிவத்தில் வந்து, ஊரில் வயதான, பெற்றோர்கள் தனித்திருப்பதால் ஊர் திரும்புவாய் என்று நியமித்தான். பகவானுடைய அர்ச்சாவதார திருமேனியில் ஈடுபட்டதால் எனக்கு ஊர் திரும்ப இயலாது என்று ஸ்ரீ க்ருஷ்ணஸூரி புலம்பினார். ப்ரஹ்மச்சாரி ரூபத்தில் வந்த பகவான் அவருக்கு ஒரு சாளக்கிராம மூர்த்தியைக் கொடுத்து இவரே உனக்கு ஸ்ரீநிவாசன், ஊர் சென்று இவரை ஆராதித்து வா என்று கூறினார்.

வைஷ்ணவோத்தமர்களுக்கு பகவானுடைய அர்ச்சா திருமேனியே லக்ஷ்யமாக இருப்பதால், இந்த சாளக்கிராம மூர்த்திக்கு உருவமில்லையே என்று வருந்தினார். இந்த வருத்தத்தை கண்ட ப்ரஹ்மச்சாரி, இந்த சாளக்கிராமமே உமக்கு உருவம் தாங்கி ஸேவை கொடுப்பார் என்றார். அதை செவிமடுத்து அவரும் கால்நடையாகவே தன் மனைவியுடன் ஊர் வந்து சேர்ந்தார்.

ஊர் சேர்ந்ததும் வடதிருக்காவேரி மணலில் சாளக்கிராமத்தை வைத்துவிட்டு தம்பதிகள் இருவரும் ஸ்நானம் செய்தார்கள். ஸ்நானம் முடித்து பார்க்கையில் சாளக்கிராமத்தை காணவில்லை. சாளக்கிராமம் மறைந்த விரஹத்தினால் அன்ன ஆகாரமின்றி, தூக்கமின்றி பகவத் தியானம் செய்து கொண்டிருந்தார். அதில் அவருக்கு ஒரு திவ்ய

ஸ்வப்னம் ஏற்பட்டது. அதில் பகவான், தான் கொள்ளிட மணலில் சாளக்கிராமத்திலிருந்து திருவுருவுடன் ஆவிர்பாவித்திருப்பதாய் தெரிவித்தார். உடனே ஊரில் உள்ள அனைவரிடமும் இந்த செய்தியை ஸ்ரீ க்ருஷ்ணஸூரி தெரிவித்தார். எல்லோரும் சென்று மணலை தோண்டலானார்கள். அதி ஆச்சர்யமான ஸ்ரீநிவாஸ பெருமாள் மிகப் பெரிய அர்ச்சா திருமேனியுடன் காட்சி தந்தார். ஸ்ரீ க்ருஷ்ணஸூரி மிகவும் ஸந்தோஷமடைந்து, ஆனந்தக்கூத்தாடி, சேங்கனூரில் ஒரு ஆலயம் அமைத்து ப்ரதிஷ்டை செய்து பூஜை செய்து வந்தார்.

இந்த ஸ்ரீநிவாஸ பெருமாள் அபய ஹஸ்தம் உள்ளவராக ஸேவை ஸாதிக்கிறார். நாலாயிர திவ்யப்ரபந்தத்திற்கும் மிகவும் அருமையான வ்யாக்யானம் செய்துள்ளார் ஸ்ரீ க்ருஷ்ணஸூரி. இவருக்கு பெரியவாச்சான்பிள்ளை என்ற திருநாமமும் உண்டு. இவருடைய வம்ஸத்தில் தோன்றியவரான ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள், இந்த பெருமாள் விஷயமாக மிகவும் உயர்ந்த ''ஆத்ம நிவேதனம்'' என்ற ஒரு நூற்றியெட்டு ஸ்லோகங்கள் செய்துள்ளார். நம் ஸ்வாமிகளுக்கு மிகவும் பிடித்த ஸ்லோகம் அது.

சேங்கனூர் ஸ்ரீநிவாஸபெருமாளுக்கு இந்த ஸ்லோகத்தை மாலையாக ஸமர்ப்பிக்கவேண்டும் என்று வெகுநாளாக நம் ஸ்வாமிகளுக்கு ஒரு அவா. அதன்படி, வெள்ளியில் நூற்றியெட்டு காசுகள் உடைய மாலை செய்து அதில் ஒவ்வொரு ஸ்லோகத்தையும் ஒவ்வொரு காசில் பொறிக்கப்பட்டது. இந்த வருடம் விஜயதசமி அன்று, அதாவது நம்முடைய ஸ்ரீநிவாஸ பெருமாளின் அவதார உத்ஸவத்தன்று, அந்த மாலை பரனூர் மஹாத்மா ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகளால் சேங்கனூர் ஸ்ரீநிவாஸ பெருமாளுக்கு சாத்தப்பட்டது.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

---

அந்தக்காலத்தில் நாமதேவர், கனகதாஸர், ராமக்ருஷ்ணர் போன்ற மஹான்களின் பக்தியை மெச்சி பகவான் அர்ச்சாவதாரத்திலிருந்து வெளிப்பட்டு பல லீலைகளைச் செய்தார் என்று பார்க்கின்றோம். எனக்கு என்ன தோன்றுகிறது என்றால், இந்த யுகத்தில் நாம் செய்து வரும் அக்கிரமங்களை கண்டு ஸகிக்கமுடியாமல் பகவான் அர்ச்சாவதாரத்திலிருந்து தன்னை வெளிப்படுத்திக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**

# நக்ஷத்ரங்களின் பெருமைகளும் விளக்கங்களும் - 18

- நித்யக்னிஹோத்ரி ப்ரஹ்மஸ்ரீ
A. ஸுந்தரேஸ ஶர்மா வாஜபேயயாஜி

## பூராடம்

உலகத்தின் மிகத் தேவையான தீர்த்தங்களை தேவதையாகக் கொண்ட நக்ஷத்ரம் பூராடம். இது, நீண்ட கட்டிலின் அமைப்பாக 2 நக்ஷத்ரங்களால் அடையாளம் காட்டப்படுகிறது. புரட்டாசி 11-ந் தேதி முதல் 24-ந் தேதி வரை மாலையில் நக்ஷத்ர உதயகாலத்தில் காணப்படுவதாக வான ஶாஸ்த்ரக்ஞர்கள் கூறுகிறார்கள். பூராடத்தில் பிறந்த புமானுக்கு மிக ப்ரியமான பத்னீ அமைவாள். அவள், புருஷனுக்கு ஏற்றபடி நடக்கக் கூடியவளாக இருப்பாள். பூராடத்தில் பிறந்தவர்கள் சற்று கர்வம் கொண்டவர்களாக இருப்பார்கள். பலரை ஸ்நேஹம் பிடிப்பதில் மிகவும் ஸமர்த்தர்கள். கிடைத்த ஸ்நேஹத்தை எக்காலத்திலும் விட்டுவிடமாட்டார்கள்.

நீண்ட முகம், கழுத்து அமைந்தவர்களாக இருப்பார்கள். எந்த விஷயத்தையும் தன் கவித்தன்மையால் திறம்படச் சொல்வதில் மிக வல்லவர்கள். சித்திரம், சிற்பக்கலை முதலியவற்றில் மிகவும் ஈடுபாட்டுடன் இருப்பார்கள். சற்று கூனலான தோள்பட்டை அமைந்தவர்களாக இருப்பார்கள். அந்தந்த ஸமயத்திற்கு தகுந்தபடி புத்திசாலித்தனமாக செயல்படுவதில் மிகவும் கெட்டிக்காரர்கள். தன் பேச்சுத்தன்மையால் யாவரையும் வசப்படுத்திவிடுவார்கள். ஆனால், இவர்களை ஸாமான்யமாக புரிந்து கொள்ள இயலாது. தீர்த்தங்களை தேவதையாகக் கொண்ட இவர்கள், ஸமுத்ரம்போல் கம்பீரமானவர்கள். உள் மனதில் உள்ளதை இவர்களிடம் அறிவது மிக கடினம். இவர்களை அண்டி வந்தவர்களை கைவிடமாட்டார்கள். மிகவும் கொடையாளிகளாக இருப்பார்கள். ஜலங்களால் ஏற்படும் பாதகங்கள் இவர்களை அண்டாது.

அம்பாளை ஆராதிப்பதால் இவர்களுக்கு நன்மைகள் பல உண்டாகும். ஸ்த்ரீகளுக்கு பூராடம், ஒன்றும் பாதகம் இல்லை. இந்த நக்ஷத்ரம் கொண்ட ஸ்த்ரீகள், மிகவும் ஸாத்வீக ஸ்வபாவம் உள்ளவர்களாக இருப்பார்கள். இவர்களது வாழ்க்கையில் எப்போதும் ஏதோ ஒரு க்லேசம் தொடர்ந்து கொண்டே இருக்கும். ஆனால் தெய்வ

அனுகூலத்தை ஸம்பாதித்து இவர்கள் இன்னல்களை தவிர்த்து விடுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கு ஸௌபாக்யத்துக்கும், ஐஸ்வர்ய ஸம்பத்துக்கும் ஒரு குறைவும் இருக்காது. ஜல ஸம்பந்தமுள்ள தொழில்களில் இவர்கள் ஈடுபட்டால் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். ■

## நாம ஸங்கீர்த்தனம்

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆக்ஞையின் பேரில், ஒரு நாம ஸங்கீர்த்தன இளைஞர் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் குழு, ஒவ்வொரு வீடாகச் சென்று ''ஹரி நாம ஸங்கீர்த்தனம்'' செய்ய சித்தமாக உள்ளது. இந்த நாம ஸங்கீர்த்தனத்தில்,

*''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ।*
*ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே'' ॥*

என்னும் கலியை நாசம் செய்ய வல்லமை படைத்த மந்த்ரத்தை இரண்டு மணி நேரம் தொடர்ந்து ஜபிக்கப்படும். இதை எல்லா ஞாயிற்றுக் கிழமைகள், மற்றும் அரசாங்க விடுமுறை நாட்களில் காலை 9 மணி முதல் 11 வரை அல்லது மாலை 3 மணி முதல் 5 மணி வரை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நாம ஸங்கீர்த்தனத்திற்கு வரும் குழுவிற்காக எந்த விதமான கட்டணமும் இல்லை. ப்ரசாத விநியோகமோ, பணச் செலவோ கிடையாது. இதில் ஸ்த்ரீகள், புருஷர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம். அக்கம் பக்கத்து வீடுகளில் உள்ள தெரிந்தவர்களையும் கலந்து கொள்ளச் சொல்லலாம். இதனை ஏற்பாடு செய்தவர்களுக்கும் கலந்து கொண்டவர்களுக்கும் உள்ள எல்லா விதமான ப்ரச்சனைகளும் தீர்ந்து விடுவது ப்ரத்யக்ஷம்.

இந்த நாம ஸங்கீர்த்தனம், தங்கள் வீடுகளில் செய்ய விருப்பம் உள்ளவர்கள், தங்களின் பெயர், முழு விலாசம், நடத்த விருப்பமுள்ள தேதி, நேரம் (காலை அல்லது மாலை) என்கிற விபரங்களை முன் கூட்டியே கடிதம் எழுதி அதன் உறை மீது ''நாம ஸங்கீர்த்தனம்'' என்று எழுதி அனுப்பவும். கடிதம் மூலம் மட்டுமே தொடர்பு கொள்ளவும். தொலைபேசி மூலமாகவோ நேரிலோ ஸ்ரீ ஸ்வாமிகளை தொடர்பு கொள்வதைத் தவிர்க்கவும்.

தபால் மூலம் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
**குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்**
''ப்ரேமிக பவனம்''
24, நேதாஜி நகர், ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600 083.

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : சிலர், கைகளை மூடி திறக்கும்பொழுது அதில் விபூதி, குங்குமம், விக்ரஹங்கள் இவற்றையெல்லாம் வரவழைக்கின்றனர். மேலும், பூஜை, பஜனை செய்யும் காலங்களிலும் அவர்களுடைய படங்களிலிருந்தும் அப்படியெல்லாம் வருகின்றனவே! இவைகள் எப்படி?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : பலர், வெளியில் ராஜராஜேஸ்வரி, ஹனுமார் போன்ற ஸ்வாமிகளை பூஜை செய்வதாக தங்களை ப்ரகடனப்படுத்திக் கொள்வார்கள். ஆனால், அந்தரங்கத்தில் ஏதாவது ஒரு துர்தேவதையை உபாஸிப்பார்கள். அந்த துர்தேவதையின் துணைகொண்டுதான் இவைகள் ஸாத்தியமாகின்றன. மேலும், அவர்கள் வரவழைக்கும் பொருளுக்கு உற்பத்தி கிடையாது. எங்கேயோ மறைத்து வைத்து இருக்கும் ஒரு பொருள் ஸாமான்ய ஜனங்கள் கண்களுக்குத் தெரியாமல் அவர்களுடைய கைகளுக்கு வருகின்றது, அவ்வளவுதான்.

இதைத்தவிர, உண்மையான யோகிகளுக்கு தாங்கள் ஸங்கல்பித்த பொருள்களை வரவழைக்க முடியும். அவைகள் அவர்களுடைய ஶ்ருஷ்டியே. ஏனென்றால், இவ்வளவு பெரிய ப்ரபஞ்சமே அவர்களுடைய கற்பனையாக இருப்பதால், அவர்கள் கல்பித்த பொருள்கள் அவர்களுடைய கைகளில் வருவது அதிசயமல்ல.

*கேள்வி : நம்முடைய மதத்தில்தான் அநேக விதமான க்ரியைகளும், ஸடங்குகளும், மூடநம்பிக்கைகளும் நிறைந்து இருக்கின்றனவே! ஏன்?*

பதில் : இதே போன்ற ஒரு கேள்வியை ஸ்வாமி விவேகானந்தரிடம் ஒருவர் கேட்டார்.''எந்த மதம் இப்படி உள்ளதோ அந்த மதம்தான் ராமக்ருஷ்ணர் போன்ற உத்தமமான ஞானிகளைத் தோற்றுவிக்கிறது எனில், அவைகள் இருந்துவிட்டுப் போகட்டுமே'' என்றார்.

*கேள்வி : ராமக்ருஷ்ணரை அவதாரம் என்கின்றோம். அதேபோல், இன்னும் அநேக மஹான்களை அவதாரம் என்கின்றோம். ஆனால், பிரஸித்தியாக பத்து அவதாரங்களைத் தானே பேசி வருகின்றோம். அப்படி இருக்கையில், இவர்கள் எல்லாம் அவதாரம் என்று சொல்வது உபசார வார்த்தைகள் தானே!*

பதில் : ஒருவர் சென்னையிலிருந்து டில்லி செல்ல விரும்புகிறார். வழியில் நாக்பூர், போபால், மதுரா போன்ற ஊர்கள் வழியாகச் செல்லவேண்டும்

என்றால் வழியில் மற்ற ஊர்களே இல்லை என்று அர்த்தம் அல்ல. நடுவில் உள்ள மிகவும் பெரிய முக்கியமான ஊர்களை மட்டும்தான் கூறுகின்றோம். அதற்கும் மத்தியில் அநேக சிறிய ஊர்கள் உள்ளனவே. அதுபோல், பகவானுடைய முதல் அவதாரம் மத்ஸ்யம் முதல், முடிவான அவதாரம் கல்கி வரை, இதற்கு மத்தியில் முக்கியமான அவதாரங்கள் நரஸிம்ஹ, ராம, க்ருஷ்ணாதி அவதாரங்கள். அதற்கு மத்தியில் உள்ள எண்ணிலடங்கா அவதாரங்கள் பல மஹான்களுடைய அவதாரங்கள்.

ஆகவே, இவர்கள் அவதார புருஷர்கள் என்பது வெறும் உபசார வார்த்தை அல்ல. வாஸ்த்தவத்தில் உண்மைதான்.

---

குழந்தைகளுக்கு, ஸதா கேளிக்கைகளிலேயே நோக்கம் இருந்தாலும், பெற்றோர்களின் கண்டிப்பிற்காக பயந்து பள்ளிப் பாடங்களைப் படிப்பார்கள். ஆனால், அதனுடைய பலனை பிற்காலத்தில் அவர்கள் அடைந்து க்ஷேமமாக இருப்பார்கள். அதுபோல், குருநாதரின் ப்ரீதியை ஸம்பாதித்துக்கொள்ள ஒருவன் செய்யும் ஸத்கார்யங்கள் அனைத்தும் அவனுக்கே க்ஷேமத்தைக் கொடுக்கும்.

- **ஸ்ரீ ஸ்வாமிகள்**

அறிவிப்பு :

1. இதுவரை மதுரமுரளியில் வெளிவந்த ஸ்ரீ ஸ்வாமிகளின் கேள்வி பதில்கள் **"ஸ்ரீ ஸ்வாமிகளின் அருளுரைகள்"** என்ற தனி புத்தகமாக வெளி வந்துள்ளது.

   விலை ரூ. 20/-. சென்னை 'ப்ரேமிகபவன'த்தில் கிடைக்கும்.

2. website : visit

   http://members.tripod.com/~madhuramurali to know more about mission activities and satsang events

   The English Spiritual Magazine "Madhura Murali" is also available on web.

# வேத கதைகள்-19

- தர்மக்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவிரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேச ஸாஸ்திரிகள்

## ஸ்வாஹாகாரத்தின் உற்பத்தி

ப்ரஜாபதி, அக்னியை முதலில் படைத்தார். அக்னிக்குப் பிறகு ப்ரஜைகளை படைத்தார். முதலில் படைக்கப்பட்ட அக்னியானவர் பாகமற்றவராக இருந்தார். தன்னைப் படைத்த தந்தை தனக்கு பாகம் அளிப்பார் என்ற நம்பிக்கையில் சிறிது காலம் தந்தையை ஸேவித்தார். பலமுறை ஸேவித்தும் பயன் கிடைக்காததால் களைப்பு அடைந்தவராக ப்ரஜைகளோடு கூட ப்ரஜாபதியை விட்டு விலகி ஓடினார். அந்த அக்னியை பிடிக்க விரும்பியவராக ப்ரஜாபதியானவர் அக்னியை பின்பற்றி ஓடினார். ஓடியும் அக்னியை பிடிக்க ப்ரஜாபதியினால் முடியவில்லை. சக்தியற்ற அந்த ப்ரஜாபதியானவர், ஓடிய சிரமத்தால் தாபமடைந்தார். அப்பொழுது அக்னியானவர், ப்ரஜாபதியைப் பார்த்து ''இவர் தாபமடைந்தார்'' என்று கூறிக்கொண்டு ஓடாமல் நின்றார். ப்ரஜாபதி, களைப்பால் ஏற்பட்ட வியர்வையை தன் நெற்றியிலிருந்து வழித்து எறிந்தார். அந்த வியர்வை ஜலம்தான் நெய்யாக ஆயிற்று.

எதனால் ப்ரஜாபதியானவர் தன் நெற்றியில் வலது பக்கத்தில் உள்ள வியர்வையை மங்களம் அற்றது என்று எண்ணியவராக துடைத்தாரோ, அதனால் உலகிலும் எந்த மனிதனுடைய வலது பாகத்தில், கேசங்கள் துடைக்கப்பட்டவைகள் போல மேல் நோக்கி பின்வளைந்தவைகள் போல உண்டாகிறதோ, அந்த மனிதனுடைய கேசத்தின் படைப்பை ப்ரஜாபதியைச் சேர்ந்த ஜேஷ்டலெக்ஷ்மி என்று அறிவாளிகள் கூறுகிறார்கள். லக்ஷ்மிக்கு முன் பிறந்தவள் ஜேஷ்டலெக்ஷ்மி எனப்படுகிறாள். அவள்தான் தரித்திர தேவதை என்றும் அழைக்கப்படுகிறாள். அவளைக் குறித்துதான் ஜேஷ்டா வ்ரதம் என்ற ஒரு நோன்பை அனுஷ்டிக்கிறார்கள். முன் கூறியபடி ஒரு மனிதனுக்கு கேசத்தின் அடையாளம் இருந்தால் தந்தையினுடைய வினைப்பயன் என்று அதை கூறுகிறார்கள். ப்ரஜாபதியானவர் களைப்பினால் தன் நெற்றியை துடைத்ததால் யாருடைய நெற்றியிலும் கேசங்கள் முளைப்பதில்லை. யாருக்காவது நெற்றியில் கேசங்கள் முளைத்தால் அது மூதேவியின் அடையாளம் ஆகும்.

பொதுவாகவே பெண்களுக்கு புருவத்தின் நடுவில் நெற்றியில் இயற்கையாகவே மூதேவி இருக்கிறாள் என்று சொல்கிறார்கள். அதை, கணவனை கொல்லக்கூடிய அலக்ஷ்மி என்று வேதம் கூறுகிறது. அதை ஒழிப்பதற்காகவே விவாகத்தில் ஒரு ப்ரயோகம் கூறப்பட்டுள்ளது. வரன் கட்டைவிரல் மோதிர விரல்களால் ஒரு தர்ப்பத்தை எடுத்து மணப்பெண்ணின் இரு புருவங்களின் நடுவில் இதமஹம் என்ற மந்திரத்தால் துடைத்து மேற்கு பக்கம் எறியவேண்டும்.

ஏனென்றால், உன் நெற்றியில் புருவத்தின் நடுவில் கணவனுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய எந்த அலக்ஷ்மியானவள் இருக்கிறாளோ அவளை இந்த தர்ப்பத்தால் துடைத்து எரிகிறேன்'' என்பது அந்த மந்த்ரத்தின் கருத்து. இப்படிச் செய்வதால் மணப்பெண்ணிற்கு நெற்றியில் உள்ள அலக்ஷ்மி விலக்கப்படுகிறாள்.

பிறகு ப்ரஜாபதியானவர் தன் நெற்றி வியர்வையிலிருந்து உண்டான நெய்யை கையில் எடுத்து, வியர்வை ஜலம் அசுத்தமானதால் ஹோமம் செய்யலாமா? கூடாதா? என்று ஆலோசித்தார். அப்பொழுது, ஹோமம் செய் என்று ஒரு அசரீரி வாக்கு கூறியது. அதைக் கேட்டு ப்ரஜாபதியானவர், நீ யார்? என்று வினவினார்.

''உன் சொல் தான்'' என்று பதில் வந்தது. ஸ்வா என்றால் தன்னுடைய வாக்கு என்று பொருள். ஆஹ என்றால் கூறுகிறது என்று பொருள். ஸ்வா, ஆஹா என்ற சொற்கள் சேர்ந்து ஸ்வாஹா என்ற முழுச்சொல்லாக ஆயிற்று. இவ்விதம் ஸ்வாஹா என்று கூறி ப்ரஜாபதியானவர், அக்னிக்கு பாகம் அளித்தார். அதிலிருந்துதான் ஸ்வாஹா என்று கூறி ஹோமம் செய்ய வேண்டும் என்று நியதி ஏற்பட்டது. ■

---

முன் அட்டை படம் : ப்ரஹ்மோத்ஸவத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள்

பின் அட்டை படம் : பக்தர்களுடன் ஸம்பாஷணை

Photos by : Kalyanakrishnan

# ஸ்ரீ நாரத பக்தி ஸூத்ரம் - 9

- ப்ரஹ்மஸ்ரீ பாலக்ருஷ்ண ஶாஸ்த்ரிகள்

## பக்தியின் பலதரப்பட்ட விவரணம்

*தல்லக்ஷணானி வாச்யந்தே நானாமதபேதாத் // 15 //*

பலவிதமான கொள்கை வித்யாஸத்தை அனுஸரித்து பக்தியின் லக்ஷணங்கள் தற்பொழுது சொல்லப்படுகின்றன.

பகவானிடம் அனுராக ரூபமானது பக்தி. அவரவர் மனோபாவம், ருசி இவற்றுக்குத் தக்கபடி பக்தியின் தனிப்பட்ட தன்மைகளில் அவரவர்களுக்கு ஈடுபாடு உண்டாகிறது. அந்த தனிப்பட்ட தன்மைகளில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு ஆசார்யர் ப்ராதான்யம் கொடுக்கின்றனர். பக்தி ஆசார்யர்கள் சிலரின் அபிப்ராயத்தை முதலில் கூறி கடைசியில் தனது அபிப்ராயத்தையும் வெளிப்படுத்துகிறார் தேவரிஷி.

*பூஜாதிஷ்வனுராக இதி பாராஶர்ய: // 16*

பூஜை முதலியவைகளில் விருப்பத்துடன் ஈடுபாடு கொண்டிருப்பதே பக்தி என்கிறார் பராஸரரின் புதல்வரான வ்யாஸ மாமுனிவர்.

நாமரூபமற்ற ப்ரஹ்மம் மனதிற்கு எட்டாது என்பதால் மனது ஸுலபமாய் ஈடுபடும்படி ஸகுண ப்ரஹ்ம உபாஸனையைக் காட்டிக் கொடுத்தார்கள் பெரியோர்கள். அத்வைதாசார்யரான ஶங்கரரும் ப்ரகரண க்ரந்தங்களில், ஸகுண ப்ரஹ்ம உபாஸனையை வலியுறுத்துகிறார். ஒரே வஸ்துவே, பனிக்கட்டி என்ற திடப்பொருளாயும் (solid), ஜலம் என்ற திரவப்பொருளாயும் (liquid) இருப்பதுபோல், ஒரே ப்ரஹ்ம ஸ்வரூபமே, ஸகுணமாயும், நிர்குணமாயும் நிற்கிறது. ஸர்வமோஹனமான, ஸுந்தரமான, மதுரமான உருவத்துடன் நிற்கும் அவனிடம் மனது ஈடுபடாமல் இருக்குமா? அன்பு பெருக்கெடுக்காமல் இருக்குமா? அன்புக்கு உரியவனைக் குளிப்பாட்டி, அலங்கரித்து, அமுது செய்வித்து கொண்டாடுவது நம் ஸ்வபாவம்தானே. ஆகவே, ஷோடஶ உபசாரங்களுடன் பகவானை பூஜிப்பது அன்பின் அடையாளமாகிறது. பூஜை முதலியவைகளில் விருப்பம் வேண்டும் என்பதை "அனுராக" எனும் பதத்தால் குறிப்பிடுகிறார். அன்புடன் செய்யும் ஆராதனையால்தான் பகவான் ப்ரஸன்னமாகிறான்.

*''பரிஜனானுராக விரசித ஶபலஸம்ஶபத ஸலில
ஸித கிஸலய துளஸிகா தூர்வாங் குரைரபி
ஸம்ப்ருதயா ஸபர்யயா கில பரம பரிதுஷ்யஸி'' (ஸ்ரீமத் பாகவதம்)*

''பரமபுருஷ! அடியார்கள் அன்புடன் ஆர்ப்பிக்கும் ஸுகந்தமான தீர்த்தம், இளந்தளிர்கள், துளஸீ, அருகம்புற்கள் நிறைந்த பூஜையால் நீ மிகவும் மகிழ்கிறாய்'' என்று நாபியின் யாகசாலையில் ருத்விக்குகள் பகவானை துதிக்கின்றனர். 'பூஜாதிஷு' என்று ஸூத்ரத்தில் உள்ள ''ஆதி'' ஸப்தமானது பூஜைக்கு அனுகுணமான புஷ்ப கைங்கர்யம், தீர்த்த கைங்கர்யம், சந்தன கைங்கர்யம், வந்தனம் செய்தல், ஆலயத்தைப் பெருக்கி, மெழுகி கோலமிடுதல், நந்தவனம் அமைத்தல், பகவான் புறப்பாட்டுக்கு கைங்கர்யம் செய்தல், உத்ஸவம் நடத்துதல் என அனைத்தையும் குறிப்பிடுவதாயுள்ளது. *''கரௌ ஹரேர் மந்திரமார்ஜனாதிஷு''* என்று ''பக்த சக்ரவர்த்தியான அம்பரீஷன் தன் கைகளால் ஆலயத்தை பெருக்கி சுத்தம் செய்தான்'' என்கிறது ஸ்ரீமத் பாகவதம்.

பூஜையும் பாஹ்யபூஜை, ஆந்தரபூஜை என இரண்டு விதப்படுகிறது. வெளியில் த்ரவ்யங்களை வைத்து செய்யும் பூஜை பாஹ்யபூஜை. மனதாலேயே த்ரவ்யங்களை கல்பித்து மனதால் செய்யும் பூஜை ஆந்தரபூஜை. இரண்டு பூஜையிலுமே ஸரீர ஸ்மரணை ஒழிந்து இறைவனிடமே ஒன்றியிருத்தல் வேண்டும். பாஹ்யபூஜையின் தொடக்கத்திலேயே பூதஸுத்தி சொல்லப்படுகிறது. மனதால் பெருமாள் திருவடியில் தன்னைச் சேர்த்து, திருமால் திருவடியிலிருந்து கிளம்பும் திவ்யகங்கையில் மூழ்கி, திவ்யஸரீரம் பெற்று திரும்பியதாய் பாவித்து பூஜை செய்ய வேண்டுமென்பது ஆராதனாக்ரமம்.

*''தேஹோ தேவாலய: ப்ரோக்தோ ஜீவோ தேவ: ஸனாதன:''*

என்று கூறியுள்ளபடி, *''ப்ரஜனனே ப்ரஹ்மா திஷ்டது''* என்றும் *''அக்னிர் மே வாசிஶ்ரித:* என்றும் தொடங்கி தன் உடலில் தேவர்களை ஸ்தாபித்து, தனது உடலையே தேவாலயமாக ஆக்கி, தன்னையே பகவத் ஸ்வரூபமாக ஆக்கி பூஜை செய்யவேண்டுமென்பது ஸம்ப்ரதாய பூஜா க்ரமம். ரஸமான ஸ்ரீ க்ருஷ்ண ஆராதனையிலும் தன்னை கோபீ ஸ்வரூபமாய் பாவித்து ஸேவை செய்ய வேண்டுமென்பது ரஸிகர்களின் பத்ததி. ஆக, எந்த விதத்திலும் ஸரீரம், ஸரீர தர்மம், இந்த்ரிய தர்மம், வெளி நினைவுகள் முதலியவற்றை முற்றிலும் மறந்து பூஜையில் ஈடுபடவேண்டும்.

ஶ்ரத்தையாகச் சேர்க்கப்பட்ட பூஜைக்கு உகந்த புஷ்பங்கள், பகவானுக்கு ப்ரீதிகரமான துளஸீ, பில்வம் முதலிய தளங்கள், ஸுகந்தமான சந்தனம், புனிதமான தீர்த்தம் இவைகளைக் கொண்டு, காமம், கோபம் முதலிய துர்குணங்களை ஒழித்து, அமைதியான சூழ்நிலையில், மனது, வாக்கு, ஶரீரம் எனும் முக்கரணங்களும் பகவானிடம் ஒன்றியிருக்க, பகவானை ஆராதிப்பது பாஹ்யபூஜை.

வெளி த்ரவ்யங்களைத் தேடாமல், மானஸீகமாகவே அனைத்தையும் கல்பித்து, மனதாலேயே அவனை ஆராதிப்பது மானஸிக பூஜை. இரண்டையுமே பகவான் ஸத்யமாக ஏற்றுக்கொள்கிறான். வ்யாஸராயர், கனகதாஸர், ரகுநாததாஸ், பூசலார் போன்ற பக்தர்களின் சரிதத்தில், அவர்கள் மனதாலேயே செய்ததை, தான் ஸத்யமாக ஏற்றுக் கொண்டதை பகவான் நிரூபித்தான்.

எனவே தான், ''பூஜை முதலியவற்றுள் விருப்பம் கொண்டிருப்பது பக்தி'' என்கிறார் ஸ்ரீ வ்யாஸர்.

*கதாதிஷ்விதி கர்க: ॥ 17 ॥*

பகவானின் கதை முதலியவைகளில் அனுராகம் கொள்வது பக்தி என்பது, கர்க முனிவரின் அபிப்ராயம்.

ஒருவருடைய ஸத்சரித்ரமும், நற்குணங்களும், நற்பண்புகளும் தெரியவரும்பொழுதுதான் அவரிடம் ப்ரீதி உண்டாகிறது. நாளுக்குநாள் ப்ரீதி வளர்கிறது. பகவானிடம் ப்ரீதி ரூபமான பக்தி உண்டாவதற்கும் உத்தமஶ்லோகனான அவனது குணங்களையும், லீலைகளையும், மஹிமையையும், கருணையையும் உணர்வதே ஹேதுவாகிறது. ஸாதுக்களை அண்டி பகவத்குணஶ்ரவணம் செய்யும்பொழுதுதான் அவைகளை தெரிந்துகொள்ளமுடிகிறது. பகவானின் கல்யாண குணங்களிலும், லீலா வைபவத்திலும், ரூபமாதுர்யத்திலும், நாமரஸத்திலும் மூழ்கி ஈடுபடமுடிகிறது.

*''ததேவ ஶோகார்ணவஶோஷணம் ந்ருணாம்*
*யதுத்தமஶ்லோக குணானுவர்ணனம்''*

என்று கடல் போன்ற நமது சோகங்களை வரண்டுபோகச் செய்து, பக்தியை வளரச்செய்து ஶாஶ்வதமான அமைதியை கொடுப்பது பகவத்குண ஶ்ரவணமே. அது ஆனந்தத்தை ஏற்படுத்துகிறது. எனவே தான், ஶ்ரவணபக்தியை முதல் பக்தியாக எடுத்தார் ப்ரஹ்லாதர். இங்கும் 'கதாதிஷு' என்ற பதத்தால் கதாஶ்ரவணம், கதாகீர்த்தனம், கதாஸ்மரணம் ஆகிய மூன்றுமே குறிப்பிடப்படுகிறது.

*"ம்ருண்வந்த, காயந்தி, க்ருணந்தி ஸாதவ:"* என்று நாரதர் வ்யாஸரிடம் கூறிய பாகவத வரிக்கு வ்யாக்யானம் செய்யும் ஸ்ரீதரஸ்வாமிகள்,

*"வக்தரி ஸதி ம்ருண்வந்தி, ம்ரோதரி ஸதி காயந்தி,*
*அன்யதா ஸ்வயமேவ க்ருணந்தி"*

"சொல்பவர்கள் கிடைத்தால் ம்ரவணம் செய்கின்றனர். கேட்பவர்கள் கிடைத்தால் தாங்கள் சொல்கின்றனர். இல்லாதபொழுது தனக்குத்தானே ஆஸ்வாதனம் செய்கின்றனர்" என்று கூறுகிறார். ம்ருதியும் "ஆத்மாவாரே த்ரஷ்டவ்ய" என்று ஸாக்ஷாத்காரத்தை பலமாகச் சொல்லி "ம்ரோதவ்ய:, மந்தவ்ய:, நிதித்யாஸிதவ்ய:" என்று ம்ரவண, மனன, நிதித்யாஸனங்களை ஸாதனைகளாக வலியுறுத்துகிறது. ஸ்ரீமத் பாகவதமும் "ஸத்யோ ஹ்ருத்யவருத்யதே" உடனேயே உள்ளத்தில் பகவான் நிறுத்தப்படுகிறான், என்றும்,

*"ம்ருண்வத: ம்ரத்தயா நித்யம் க்ருணதம்ச ஸ்வசேஷ்டிதம் /*
*காலேன நாதிதீர்கேண பகவான் விமதே ஹ்ருதி //*

(ஸ்ரீமத் பாகவதம்)


"தினமும் பகவானது லீலைகளை ம்ரத்தையுடன் கேட்டும், சொல்லியும் ஆனந்தப்படும் பக்தனின் உள்ளத்தில் விரைவிலேயே பகவான் நுழைகிறான்" என்றும், கதாம்ரவணத்தால் ஸுலபமாய் பகவான் வருகிறான் என்றும் கூறுகிறது. ஆகையால், கதை முதலியவைகளில் அனுராகம் கொள்வது பக்தி என்கிறார் கர்க முனிவர். ஸ்ரீ முகர், பரீக்ஷித், குலசேகரர், ரஸ்கான் முதலிய பக்தர்கள் இந்த பக்திக்கு எடுத்துக்காட்டாக இருந்தனர்.

*"ஆத்மரத்யவிரோதேனேதி ஸாண்டில்ய:" // 18 //*

"ஆத்மரதிக்கு பாதகமில்லாமல் அனுராகம் கொள்வது பக்தி" என்கிறார் ஸாண்டில்யர்.

ஸாண்டில்யர் காட்டும் பக்தி நெறியினால் ஞானமும் பக்தியும் ஒன்றுபடுத்திக் காட்டப்படுகிறது. ஸர்வாத்ம ஸ்வரூபமாய் பகவானிடம் ப்ரேமை கொள்வதே இங்கு சொல்லப்படுகிறது. முக்குணங்களையும், மூன்று அவஸ்தைகளையும், மூன்று ஸரீரத்தையும் கடந்த ஆத்மஸ்வரூபமே "நான்" என்று சொல்லப்படுகிறது.

(தொடர்ச்சி 19-ம் பக்கம்)



# எந்தரோ மஹானுபாவுலு - 7

ஸ்ரீ விஜயீந்த்ர ஸ்வாமிகளிடம், ஒரு ஸமயம் ஆந்திர தேசத்து பாம்புபிடாரன் வந்து தன் வித்தையில் போட்டிக்கு அழைத்தான். ஸ்வாமிகள் அதற்கு ஒத்துக் கொள்ளவே, மறுநாள் ஏழெட்டு பாம்புப் பெட்டிகள், மகுடி இவைகளுடன் மடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் அவன் ஆஜரானான். ஸ்வாமிகளும் கம்பீரமாக ஸபைக்கு விஜயம் செய்தார். பாம்புபிடாரன் ஸ்வாமிகளை நமஸ்கரித்து பேசலுற்றான். ''ஸ்வாமி, தாங்களோ ஸன்யாஸி, உங்களுக்கும் என் வித்தைக்கும் ஸம்பந்தமில்லை. வீணே போட்டியிட்டு உயிரை விடாதீர்கள். இது பயங்கர விளையாட்டு. யோசித்து பதில் சொல்லுங்கள்'' என்றான். உடனே ஸ்வாமிகள் அமைதியாக, ''ஐயா, என்னை ரக்ஷிக்கும் பொறுப்பு ஸ்ரீ ஹரியுடையது. நீங்கள் அது பற்றி கவலைப்படாமல் உமது வித்தையைக் காட்டவும்'' என்றார்.

பாம்புபிடாரன், மிக ஆர்ப்பாரத்துடன் ஸ்வாமிகளையும் ஸபையோர்களையும் ஏளனமாக நோக்கிவிட்டு ஒரு பெட்டியிலிருந்து ஒரு பாம்பை வெளியே விட்டு மகுடி ஊதி ஆட்டினான். அது முடிந்ததும் பாம்பு, படத்தை கீழே போட்டு படுத்துவிட்டது. உடனே பிடாரன் ஸ்வாமியை நோக்கி, ''உங்கள் வித்தையை இப்போது காட்டுங்கள். அதே ராகத்தை ஊதி இந்த பாம்பை எழுப்புங்கள் பார்க்கலாம். ஒரு அபஸ்வரம் வந்தாலும் பாம்பு உங்கள் மேல் சீறி கடித்துவிடும். உஷார்'' என்றான். ஸ்வாமிகளோ, தன் சீடனை நோக்கி ''எடு'' என்றார். அவன் தான் கொண்டுவந்த குழலை அவரிடம் எடுத்துத் தந்தான். இதைப் பார்த்த பிடாரன் பரிஹாஸமாக ''இதென்ன ஸங்கீத கச்சேரியா ஸ்வாமி, குழலூத! பாம்பு மகுடிக்குத்தான் ஆடும். மகுடி ஊதத் தெரியவில்லை என்றால் தோல்வியை ஒப்பு கொண்டு விடுங்கள்'' என்றான். ஸ்வாமிகள் சிரித்துக் கொண்டே, ''என் ஸ்வாமி கண்ணன், காளிங்கன் மீது நர்த்தனம் செய்து அதை அடக்கும்போது, குழல்தானே ஊதினான். நான் அவன் தாஸன் ஆனதால் நானும் அதையே செய்யவேண்டும்'' என்று கூறி குழலூதினார்.

என்ன ப்ரஹ்மானந்தமான நாதம்! பாம்பு எழுந்து படமெடுத்து ஆடி மயங்கி விழுந்தது. பிடாரனின் முகம் கறுத்தது. ஆனாலும் சமாளித்துக் கொண்டு, ''ஸ்வாமி! என்னிடம் பல்வேறு நாகங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றையும் ஒவ்வொரு ராகத்தில் ஆடப் பழக்கியிருக்கிறேன். நான் முன்பு செய்ததுபோல் ராகத்தை வாஸித்து

காட்டமாட்டேன். நீங்களே அந்தந்த பாம்புக்கான ராகத்தை கண்டுணர்ந்து வாஸித்து அவற்றை ஆடவைக்க வேண்டும். தவறான ராகம் வாஸித்தால் பாம்பு மேலே விழுந்து கடிக்கும். ஜாக்கிரதை'' என்றான். ஸ்வாமிகள் நிதானமாக, ''நீ எல்லா பாம்புகளையும் ஏக காலத்தில் வெளியில் விடு. நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று கூற, அனைவரும் இதென்ன விபரீதம்! என நடுநடுங்கினர்.

பிடாரனும் பாம்புகளை வெளியே விட, ஸ்வாமிகள் குழலை எடுத்து தேவையான ராகங்களை கலந்து ஸ்வரப்படுத்தி நாகஸ்வர இசையை இசைத்ததும் குழலிலிருந்து பெருகிய நாதவெள்ளத்தில் எல்லா பாம்புகளும் தத்தம் ராகங்களைக் கண்டுகொண்டு விதவிதமாக ஆட ஆரம்பித்தன. நாம் ஸாதாரணமாகக் கேட்கும் ராகமாலிகையை ஸ்வாமிகள், இசைக்கவில்லை. அப்படியானால் ஒரு ராகத்துக்கு ஒரு பாம்புதான் ஆடும். ஆனால் அவரோ, அனைத்து ராகங்களின் ஸ்வரங்களை ஸம்மேளனம் செய்து புதுமையான நாதக் கலவையை இசைத்ததும் அந்தந்த பாம்புகள் தனக்கு வேண்டிய ராகத்தை மட்டும் கேட்டு ஆடின. பற்பல வானொலி நிலையங்களிலிருந்து ஒலிபரப்பப்படும் ஒலியலைகள் எவ்வாறு ஆகாயத்தில் (Ether) மிதந்து வந்தாலும் நம் ரேடியோ நமக்கு வேண்டிய ஸங்கீதத்தை மட்டும் க்ரஹித்துக் கொள்வதுபோல் பாம்புகளும் தத்தம் இசையை இனம் கண்டுகொண்டு ஆடின.

பாம்புபிடாரன் ப்ரமை அடைந்து, ''இதெல்லாம் போதாது. என்னிடம் கொடிய நீளமான கருநாகம் உள்ளது. அதை அவிழ்த்து விடுகிறேன். முடிந்தால் தப்பித்துக் கொள்ளுங்கள்'' என்று பாம்பை ஏவினான். ஸ்வாமிகள், தன் தண்டகாஷ்டத்தால் தன்னைச் சுற்றி ஒரு கோடு போட்டுக் கொண்டு கம்பீரமாக சற்றும் கலங்காமல் நின்றார். சீறி வந்த கருநாகம் ஒன்றும் செய்யமுடியாமல் தரையில் படத்தால் அடித்துக் கொண்டு வலம் வந்து கொண்டிருந்தது. முடிவில் களைத்துப்போய் மயங்கிப் படுத்துவிட்டது.

பிடாரன் ஸ்தம்பித்து நிற்க, ஸ்வாமிகள், ''நான் இப்பொழுது உன்னை சோதிக்கிறேன்'' என்று சொல்லி அதே நாகத்தை அவன் மீது ஏவ அது சீறிக்கொண்டு அவன் மேல் பாய்ந்து அவனைச் சுற்றிக் கொண்டது. பிடாரன் அலறிக் கொண்டு ஸ்வாமிகளின் சரணங்களில் ஓடிவந்து வீழ்ந்து அபயம் வேண்ட, கருணாமூர்த்தியான ஸ்வாமிகள், கருட மந்த்ரத்தை ஜபித்தவுடன் ஆச்சரியமாக எங்கிருந்தோ ஒரு கருடன்

பறந்து வந்து கருநாகத்தை கொத்திக் கொண்டு சென்றது. ஸபையோர் நிம்மதியாக பெருமூச்சு விட, பிடாரன், அபசாரத்தை பொறுத்தருள வேண்டினான். ஸ்வாமிகள் அவனை மன்னித்து ஸன்மானமும் ப்ரஸாதமும் கொடுத்து ஆசி கூறி அனுப்பினார்.

பிறகு ஸ்வாமிகள், தான் நின்ற இடத்திலேயே தண்ட காஷ்டத்தால் தோண்டினார். சுத்தமான சுவையான ஜலம் கங்காஜலம் போல் பீறிட்டுக் கொண்டு எழ ஜனங்கள் ஆச்சர்யம் அடைந்தனர். ஸ்வாமிகள் அங்கே கிணறு தோண்ட ஏற்பாடு செய்தார். அதுவே கருடதீர்த்தம் எனப் பெயர் பெற்றது. அதில் ஸ்நானம் செய்து தீர்த்தத்தை உட்கொண்டால் வயிற்று உபாதைகள் தீரும் என ஸ்வாமிகள் அருளினார். ஸ்ரீ ஆதிகும்பேஶ்வரர் ஆலயத்தில் தெற்கு பக்கத்தில் உள்ள மடத்தில் இந்த கருடதீர்த்தம் இன்றும் உள்ளது.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

---

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

ப்ரஹ்மாபின்னமான ஆத்மாவை தவிர வேறு எதிலும் ரதிகொள்ளாமல், ஸர்வாத்மஸ்வரூபமாய் அவனிடம் ரதி கொண்டிருக்கும் ஆத்மாராம நிலையே ஆத்மரதியாகும். ஆத்ம பின்னமான வஸ்துக்கள் தெரிவதே ஆத்மரதிக்கு பாதகமாகும். எனவே, அன்யவஸ்துக்கள் தெரியாமல் ஸர்வாத்மஸ்வரூபத்தினிடமே அனுராகம் கொள்வதே பக்தி என்கிறார் ஸாண்டில்யமுனிவர். ஏனைய நிலைகளில் அந்தர்யாமியாக பார்க்கப்படும் இறைவன் இங்கு ஆத்மஸ்வரூபமாகவே உணரப்படுகிறான். இதையே 'ஶாந்த**பா**வ பக்தி' என்று பக்தி ஶாஸ்த்ரங்கள் சொல்கின்றன. ஸ்ரீ ஶங்கரரும் விவேக சூடாமணியில்,

*"மோக்ஷஸாதனஸாமக்ர்யாம் பக்திரேவ கரீயஸீ ।*
*ஸ்வஸ்வரூபானுஸந்தானம் பக்திரித்யபிதீயதே ॥*

"மோக்ஷத்திற்கான ஸாதனைகளுள் உயர்ந்தது பக்தியே, ஸ்வஸ்வரூபத்தை அனுஸந்தானம் செய்வதே பக்தியாகும்" என்று கூறுகிறார். ஸ்ரீ ஶுகர், ஜடபரதர், ஸதாஶிவ ப்ரும்மேந்த்ராள் போன்ற மஹாத்மாக்கள் இந்த பக்திக்கு எடுத்துக்காட்டாக உள்ளனர்.

(தொடரும்)



# மஹாபாரதக் கதைகள்

**பீஷ்மர் தருமரிடம், சோம்பல் அனர்த்தத்திற்குக் காரணமாகுமென்பதை விளங்கச் செய்யும் ஒட்டகத்தின் கதையைச் சொல்லியது.**

யுதிஷ்டிரர் பீஷ்மரிடம், ''ஸகல தர்மங்களையும் ரக்ஷிப்பவர்களுள் சிறந்தவரே! அரசன் எதைச் செய்ய வேண்டும்? எதைச் செய்தால் ஸுகமுள்ளவனாயிருப்பான்? அவற்றை உண்மையாக எனக்குச் சொல்ல வேண்டும்? என்று கேட்க, பீஷ்மர் சொல்லத் தொடங்கினார்.

''இவ்வுலகில் அரசன் எதைச் செய்யவேண்டுமோ, எதைச் செய்தால் ஸுகமுள்ளவனாயிருப்பானோ அவற்றை உனக்கு உபதேசிக்கிறேன் கேள்'' என்றார்.

யுதிஷ்டிர! நான் உனக்கு ஒட்டகத்தைப் பற்றிய கதையைச் சொல்கின்றேன். ப்ரஜாபதியின் குலத்தில் உதித்ததும் முற்பிறப்பின் அறிவுள்ளதுமான ஒரு பெரிய ஒட்டகம் மிகக் கடுமையான நியமத்துடன் ஆரண்யத்தில் மிக்க பெருந்தவஞ் செய்துகொண்டிருந்தது. அந்த தவத்தின் முடிவில் ப்ரஹ்மதேவர் ப்ரத்யக்ஷமாகி அவ்வொட்டகம் விரும்பிய வரத்தை வினவினார். அந்த ஒட்டகம் ப்ரஹ்மாவைப் பார்த்து, ''ஓ பகவானே! உம்முடைய அனுக்ரஹத்தால் என்னுடைய இக்கழுத்தானது நூறு யோஜனைக்கு மேல் நீண்டதாயிருக்க வேண்டும். ப்ரபுவே! அவ்வாறு நான் ஸஞ்சரிக்க விரும்புகின்றேன்'' என்றது. ப்ரஹ்மாவும், வரத்தை அளிக்கும் மஹாத்மாவாதலால், ''அப்படியே இருக்கட்டும்'' என்று சொல்லி வரத்தை அளித்தார்.

அந்த ஒட்டகமும் அந்த வரத்தைப் பெற்றுக்கொண்டு தன் காடு போய்ச் சேர்ந்தது. அப்பொழுது மிகக் கெட்ட புத்தியுள்ள அந்த ஒட்டகமானது, ப்ரஹ்மதேவர் அளித்த வரத்தின் காரணத்தினால் மிகவும் சோம்பல் உள்ளதாக இருந்தது. அந்த ஒட்டகம் ஓரிடத்திற்கு செல்லவும், இரை தின்னவும் விரும்பவில்லை. ஒரு நாள் அவ்வொட்டகம் மன வருத்தமுற்று நூறு யோஜனை நீளமுள்ள அந்த தன் கழுத்தை நீட்டிக் கொண்டே ஸஞ்சரிக்கத் தொடங்கியது. அப்பொழுது பெருங்காற்று உண்டாயிற்று. அவிவேகியான அந்த ஒட்டகமானது தன் தலையையும் கழுத்தையும் ஒரு குகையில் வைத்துக் கொண்டிருந்தது. உலகத்தை முழுகச் செய்யும் மிகப் பெரிய மழை பெய்தது. அப்பொழுது குளிர் சூழ்ந்த அங்கமுள்ளதும், பசியும் களைப்புமுள்ளதுமான ஒரு நரியானது

மழையினால் பெருகிய ஜலத்தால் துன்பப்பட்டுத் தன் மனைவியுடன் அந்த குகைக்கு வந்தது.

மாம்ஸத்தினால் ஜீவிப்பதும், மிகவும் அதிகமான பசியும், களைப்புமுள்ளதுமான அந்த நரியானது ஒட்டகத்தின் கழுத்தைக் கண்டவுடன் பக்ஷிக்கத் தொடங்கியது. அவிவேகியான அந்த ஒட்டகமானது தான் பக்ஷிக்கப்படுவதாக அறிந்ததும் மிகவும் துக்கமடைந்தது. தன்னுடைய கழுத்தைச் சுருக்க முயற்சி செய்தது. ஒட்டகமானது மேலும் கீழும் தன் கழுத்தைச் சுருக்குவதற்குள் மனைவியுடன் அந்த நரி ஒட்டகத்தைத் தின்றுவிட்டது. இவ்வாறு ஒட்டகத்தைக் கொன்று தின்றபிறகு காற்றும் மழையும் நின்றபின், நரி அந்த குகையிலிருந்து வெளியே வந்தது. இவ்வாறாக கெட்டபுத்தியுள்ள ஒட்டகமானது நாசமடைந்தது.

ஆகவே சோம்பலை தள்ளிவிட்டு, உபாயத்துடன் இந்த்ரியங்களை அடக்கி, சுறுசுறுப்புடன் ஶாஸ்த்ர விதிகளை அறிந்து, புத்தியால் வேலைகளை செய்வாய்'' என்று உபதேஸித்தார். ■

---

''கீதையில் பகவான், கர்மாவை பண்ணவேண்டும் என்றும், ஒரு காலும் அதை விடலாகாது என்றும் பல முறை சொல்கின்றான். ஆனால் சிலர், கர்மாவை விட்டு பகவானை கீர்த்தனம் செய்கின்றனர். ஒரு எஜமானனுக்கு இருக்கும் இரண்டு வேலைக்காரர்களில் வேலை செய்யாமல் எஜமானனையே ஸ்துதி பாடுபவனைக் காட்டிலும், ஸ்துதி செய்யாவிட்டாலும் வேலையில் கவனம் செலுத்துபவனை எப்படி எஜமானன் பாராட்டுவானோ அதுபோல் கர்மாவை செய்பவனைத்தானே பகவான் கொண்டாடுவான். அதை விட்டு கீர்த்தனம் செய்பவனை எப்படி கொண்டாடுவான்'' என்று சிலர் குறை கூறுகின்றனர்.

ஆனால் வாஸ்தவத்தில், கர்மாவை பண்ணு என்று சொன்ன அதே பகவான், கீதையில் ''என்னை ஸ்துதி பண்ணுவாய்'' என்றும் சொல்கின்றான். அதனால் பகவான் சொல்வதைதான் பக்தனும் செய்கின்றான்.

- ஸ்ரீ ஸ்வாமிகள்

# ஸ்ரீமத் ராமாயணத்தில் தர்மம்

- ஸ்ரீ ஸ்வாமிகள்

பகவான், தர்மத்தை ஸ்தாபிப்பதற்காக ஒவ்வொரு யுகத்திலும் தான் மீண்டும் மீண்டும் அவதரிப்பதாக கீதையில் கூறுகின்றான். தர்மம், பாகவத தர்மம் என்றும், வைதீக தர்மம் என்றும் இரண்டு வகையானது. வைதீக தர்மத்தின் மூலம் பகவான் வேதத்தை ஆதாரமாகக் கொண்ட ஸநாதனமான மதத்தை புனர் உத்தாரணம் செய்கின்றான். பாகவத தர்மங்களின் மூலம் பக்தர்கள் உட்பட அனைவரையும் உத்தாரணம் செய்கின்றான். ஸத்தியத்தை பேசு என்றும், அஹிம்ஸையை கடைபிடி என்றும், வைராக்கியத்துடன் இரு என்றும் மாதா பிதாக்களுக்கு ஶுச்ருஷை செய் என்றும், ஸர்வ ஜனங்களிடமும் ப்ரேமையுடன் நடந்து கொள் என்றும், கோபமே கொள்ளாதே என்றெல்லாம் உபதேஸம் செய்வதும் சொற்பொழிவாற்றுவதும் மிகவும் எளிது. ஆனால், இவைகளில் சிறிதளவு கூட அப்யாஸத்தில் கொண்டுவருவது மிகவும் சிரமம். நல்ல விஷயங்களை அனுஷ்டித்துக்கொண்டே நல்லதை உபதேஸம் செய்ய வேண்டுமேயன்றி அனுஷ்டிக்காமல் செய்யும் உபதேஸத்தால் ஒரு பலனும் இல்லை.

அனுஷ்டானம் இருந்தால் மட்டும்கூட போதும். உபதேஸமே வேண்டியதில்லை. இப்படி வந்த அவதாரம்தான் ஸ்ரீ ராமாவதாரம். மக்களில் இருஸாரார்கள் உண்டு. மஹாத்மாக்களின் சரித்திரங்களைப் படிப்பவர்களும், மஹாத்மாக்களை நேரில் தரிசிப்பவர்களும், சிலர், நாமும் அவர்களைப்போல் கடுமையான ஸாதனைகள் செய்து பகவானை தரிசிக்கவேண்டும் என்ற ஆசை கொண்டு, ஸாதனைகளில் ஈடுபடுவார்கள் ஒரு ஸாரர் .

மற்றொரு ஸாரர், ''அவர்கள் அவதார புருஷர்கள்; நாமோ அஸக்தர்கள். அவர்களைப்போல் கடுமையான ஸாதனைகளை நம்மால் பண்ணமுடியாது. அப்பேர்ப்பட்டவர்களிடம் நாம் பக்தி கொண்டு ஶ்ரத்தையுடன் ஶரணாகதி செய்தால் போதும். நமக்கும் ஸத்கதி கிடைக்கும்'' என்று நினைப்பார்கள். இதில் எது சரி என்றால் இரண்டும் சரியே. இது அவரவர்களின் மனோபாவத்தை பொறுத்த விஷயம். அதுபோல், ராமருடைய தர்ம அனுஷ்டானத்தைப் பார்த்து தானும் அதுபோல் தர்மாத்மாவாக வாழவேண்டும் என்று நினைத்து வாழ முயன்றாலும் சரி, அல்லது, அப்பேர்பட்ட ராமரிடம் பக்திபூண்டு ஶரணாகதி செய்து வந்தாலும் சரி, அது க்ஷேமத்தையே கொடுக்கும்.

நவீனவாதிகள் சிலர், இப்பேர்பட்ட தர்மாத்மாவான ராமரிடமும் தன்னுடைய குதர்க்க புத்தியால் குறை காண விரும்புகின்றனர். இவர்களுக்கு ஏதோ ஒரு விஷயத்தில் ப்ரீதியும் மற்றொரு விஷயத்தில் த்வேஷமும் ஸித்திப்பதால் அதற்கு தகுந்தார்போல் அனைத்தையும் திரிக்கப் பார்க்கின்றனர். அவரவர்களின் மனோபாவத்திற்கு தகுந்தபடி தர்மங்களை எடுத்துச் சொல்கின்றனர்.

ஒரு குழந்தையிடம் விலையுயர்ந்த ஆபரணங்களையும், பணத்தையும் ஒரு புத்திசாலி தகப்பன் கொடுப்பதில்லை. அப்படி கொடுப்பதும் அந்த குழந்தையின் உயிருக்கே ஆபத்தாக முடியும். அவ்வாறு கொடுக்காததினால் அந்த தகப்பனாருக்கு தன் குழந்தைகளின் மேல் ப்ரியம் இல்லை என்பதோ, அந்த குழந்தைக்கு ஸ்வதந்திரம் அளிக்க விருப்பமில்லை என்று கூறுவதோ, எப்படி முட்டாள்தனமோ, அதுபோல்தான் அந்த காலத்தில் பெண்களுக்கு ஸ்வதந்திரம் தராமல் அவர்களை அடிமைகளாக்கி வைத்திருந்தார்கள் என்று சொல்வது.

பெண்கள் ஸரள ஸ்வபாவம் உள்ளவர்களாக இருப்பதாலும், சீக்கிரமே உணர்ச்சி வசப்படக்கூடியவர்களாக இருப்பதாலும், பலபேர்களுடன் ஸமுதாயத்தில் கலந்து பழகக்கூடிய ஸந்தர்ப்பம் அமையுமானால் அது அவர்களுக்கே கேடாக அமையும் என்பதை உத்தேஸித்துதான் இவைகள் கூறப்பட்டவைகளே தவிர வேறு காரணம் எதுவும் இல்லை. ஆண் ஆதிக்கத்தினால் சில பெண்களுக்கு துன்பங்கள் ஏற்பட்டிருக்கலாம், எந்த அமைப்பிலும் குறைகள் என்பது தவிர்க்க முடியாதவை. குறைகளை குறைக்கமுடியுமே தவிர தவிர்க்க முடியாது. எந்த அமைப்பில் மிகவும் குறைந்த அளவில் குறைபாடுகள் உள்ளதோ அந்த அமைப்பே சிறந்த அமைப்பு ஆகும்.

ஜாதிகள் இல்லை என்று இந்த காலத்தில் எல்லோரும் வீராவேசமாக முழங்கினாலும், இப்பொழுதுதான் முன்பு எப்பொழுதையும் காட்டிலும், ஜாதியின் பெயரால் சண்டைகளும், கொலைகளும், அநீதிகளும் இழைக்கப்படுகின்றன. இவைகளுக்கெல்லாம் அவரவர்களின் சுயநலமே காரணம். அதுபோல், இப்பொழுதெல்லாம் பெண்களுக்கு ஸ்வதந்திரம் ஸமத்துவம் என்று எங்கும் பேசினாலும், தினமும் செய்தித்தாள்களில் பலதரப்பட்டவர்களால் பெண்களுடைய மானத்திற்கு பங்கம் ஏற்படுவதைப் படிக்க நேரிடுகின்றது.

புகைப்பிடித்தல், போதை மருந்துகள் உபயோகப்படுத்துதல், மதுபானம் பருகுதல் போன்றவைகள் ஆண்களுக்கு மட்டும் உரியவைகளா?, அதில் எங்களுக்கும் பங்கு உண்டு என்று கூறி

அவர்களும் வெளிப்படையாக பொது இடங்களில் கூட மேற்படி பொருட்களை உபயோகப்படுத்துகின்றனர். அது என்ன ஆண்கள் மட்டும் சீரழிவது? அவர்களுக்கு ஸமமாக நாங்களும் சீரழிகின்றோம் என்று அவர்கள் கூறுவதுபோல் உள்ளது. இதில்தான் நாம் ஸமத்துவத்தை கண்டுள்ளோம்.

ஸ்ரீராமாவதாரத்தில், ராமர் தன்னுடைய மனைவியை மீட்டுவந்ததை காட்டிலும், வேறு எதை ஸாதித்தார்? என்று லோகாயதவாதிகளும், நாத்திகர்களும் கேட்கின்றனர். தன்னுடைய தெய்வத்தை பற்றி இப்படி பேசுகின்றார்களே என்று மனம் வருந்த வேண்டியிருக்க, இவர்கள் பேசுவதிலும் நியாயம் இருக்குமோ என்று மனம் குழம்புகின்றார்கள் சில ஆஸ்திகர்களும் கூட.

ஸ்ரீமத் ராமாயணத்தில் பல தர்மங்கள் புதைந்து கிடக்கின்றன. எந்த ஒரு காலகட்டத்தில், குழந்தைகள் தங்களுக்கு துரோகம் செய்துவிட்டதாக பெற்றோர்களும், தாய் தந்தையர்கள் தங்களுக்கு துரோகம் செய்து விட்டதாகப் பிள்ளைகளும் கூறி நீதிமன்றத்தில் வழக்கு தொடுப்பார்களோ அல்லது விவாகம் செய்த மனைவியைவிட்டு புருஷன் பல ஸ்த்ரீகளுடன் ரமிப்பானோ, மனைவி தன்னுடைய கற்பைப் பற்றி கவலைப்படாமல், தன்னை ஆசை வார்த்தைகளில் மயக்குபவன் பின் சென்றுவிடுவாளோ, ஸகோதரர்கள் ஒருவருக்கு ஒருவர் துரோகம் செய்துகொள்வார்களோ, நல்லவர்களாக இருந்தவர்கள் நாளை மாறி அந்த நண்பனின் காலையே வாரிவிடுவார்களோ, ராஜாங்கத்தை ஆள்பவர்கள் ப்ரஜைகளை ஏமாற்றப் பார்ப்பார்களோ, ப்ரஜைகள் ராஜாங்கத்தை ஆள்பவர்களை கொலை செய்யவும்கூட துணிவார்களோ, இன்று எதிரியாக இருப்பவன் நாளை நண்பனாக மாறிவிடுவதும், நண்பனாக இருந்தவன் நாளை எதிரியாக மாறிவிடுவதும், விரோதியா, நண்பனா என்று தீர்மானிக்க முடியாதபடி மக்கள் பழகுவார்களோ, எந்த காலத்தில் அவரவர்களின் சுயநலமே ப்ரதானம் என்று மக்கள் வாழ்வார்களோ, அந்த கால கட்டத்தில் ராமாயணம் தேவையில்லை.

இதில் அநேகமாக பல விஷயங்களை நாம் இன்று நேரில் அனுபவித்து வந்தாலும், இந்த ஒரு சூழ்நிலை முழுவதுமாக கற்பனை செய்து பார்ப்பதற்குக்கூட அச்சமாக உள்ளது. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் ஆறறிவுள்ள மனிதன் ஐந்தறிவு உள்ள ம்ருகத்தைக் காட்டிலும் கேவலமாகிவிடுவான்.

(தொடர்ச்சி 28-ம் பக்கம்)



# பாலகர்களுக்கு ஒரு கதை - 13

- ஸ்ரீ ஸ்வாமிகள்

## ஏகநாதர்

ஏகநாதர் என்ற ஒரு மஹாத்மா மஹாராஷ்ட்ரத்தில் ப்ரதிஷ்டானபுரம் என்ற கிராமத்தில் வஸித்து வந்தார். நித்யம், தன்னுடைய குருவான ஜனார்த்தன ஸ்வாமிகள் அனுக்ரஹம் செய்து அருளிய ருக்மிணி ஸமேத பாண்டுரங்கனை ஆராதித்து, பாகவத தர்மங்களை அனுஷ்டானம் செய்துகொண்டு வந்தார். அவரிடம் இருந்த உயர்ந்த குணம் யாதெனில், அவருக்கு கோபமே வராது என்பதே. இந்த விஷயம் அந்த ஊரில் உள்ள எல்லோருக்கும் தெரியும். அந்த ஊரில் சிலர், நித்யம் ஒரு இடத்தில் கூடி சூதாடுவது வழக்கம். ஒரு நாள், அவர்களில் ஒருவன் சூதாடுவதற்கு தாமதமாக வந்தான். தாமதமாக வந்த காரணம் யாது என்று மற்றவர்கள் அவனிடம் விசாரித்தார்கள். அதற்கு அவன், ''இந்த ஊரில் ஏகநாதர் என்ற மஹாத்மா வாழ்ந்து வருகின்றார். அவரை ஸேவிக்கச் சென்று கொண்டிருந்தேன். ஆகவேதான் கால தாமதம் ஆகியது'' என்று சொன்னான்.

''அவரிடம் அப்படி என்ன பெரிய விசேஷத்தைக் கண்டாய்?'' என்று கேட்டு மற்றவர்கள் எள்ளி நகையாடினார்கள். அதற்கு அவன், ''ஏகநாதருக்கு எந்த நிலையிலும் கோபமே வராது, அதுவேதான் அவரிடம் நான் கண்ட விசேஷம்'' என்றான். மற்றவனோ, ''கோபமே வராதவன் ஒரு மனிதனா?'' என்றான். அதற்கு பதில் கூறுகையில், ''அதனால்தான் நாம் அவரை மஹாத்மா என்கின்றோம்'' என்றான். இப்படி வாக்குவாதம் முற்றியது. அதில் ஒருவன், ''நான் எப்படியாவது அவரை கோபவசப்படச் செய்து வருகின்றேன் பார்'' என்றெல்லாம் சவால் விட்டான்.

மறுநாள் காலை 4 மணிக்கு கோதாவரிக்குச் சென்று ஸ்நானம் செய்துவிட்டு அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு ஏகநாதர் திரும்பிக் கொண்டிருந்தார். சவால் விட்டவன் மாடியிலிருந்து தாம்பூலம் மென்று அவர் மீது உமிழ்ந்தான். அவர் சிறிது கூட கோபம் அடையாமல் மீண்டும் சென்று ஸ்நானம் செய்து வந்தார். இப்படியாக மீண்டும் மீண்டும் பல முறை தாம்பூலத்தை ஏகநாதர் மேல் உமிழ்ந்தும் அவர் கொஞ்சம் கூட முகம் சுளிக்காமல் மறுபடியும் நதிதீரம் சென்று ஸ்நானம் செய்து வந்தார்.

தாம்பூலம் உமிழ்ந்து உமிழ்ந்து இவனுக்கு வாய் வலிக்க ஆரம்பித்துவிட்டது. உடம்பு அலுத்துவிட்டது. ஆனால், ஏகநாதர்

ஸ்நானம் செய்து, ஸ்நானம் செய்து சளைக்கவில்லை. கடைசியில், அவனே ஆச்சரியப்பட்டு வெட்கமடைந்து ஏகநாதருடைய சரணத்தில் வந்து விழுந்து, தன்னுடைய அபராதங்களை பொறுத்து தன்னை மன்னிக்கும்படி ப்ரார்த்தித்தான். அவரும் அவனை கருணையுடன் ஆட்கொண்டார். அவன் ஏகநாதரைப் பார்த்து, ''ஸ்வாமி, தங்களால் இது எப்படி ஸாத்யமாயிற்று?'' என்று வியப்புடன் வினவினான்.

அதற்கு அவரும், ''ஸாதுக்களுக்கு ஹிம்ஸை செய்வது என்ற ஒரு துஷ்ட கார்யத்திலேயே உனக்கு பிடிவாதம் இருக்குமானால், எத்தனை ஹிம்ஸித்தாலும் கோபமே கொள்ளக்கூடாது என்ற நல்ல குணத்தில் நான் பிடிவாதமாக இருப்பதில் ஆச்சரியம் என்ன?. மேலும் கோதாவரியில் ஸ்நானம் செய்துவிட்டு பூஜைக்காக செல்கின்றேன். ஸரீரத்தில் பட்ட அசுத்தத்தை ஸ்நானம் செய்து போக்கிக்கொள்ளலாம். ஆனால் நான் கோபப்பட்டு அதன் வசப்படுவேனானால், என் சித்தம் அசுத்தம் ஆகிவிடுகின்றது. அதை போக்கிக்கொள்ள எந்த ஸ்நானமும் கிடையாது. அந்த கோபத்துடன் நான் சென்று பூஜை செய்தாலும் அது பலிக்காது'' என்று பதில் உரைத்தார்.

நமக்கு எப்பொழுது கோபம் வந்தாலும் சிறிது நேரம் ஏகநாதரை ஸ்மரித்தால் போதும். உடனே அது நம்மைவிட்டு பிரிந்து போய்விடும்.

---

(25-ம் பக்க தொடர்ச்சி)

ஸ்ரீமத் ராமாயணத்தில், மகன் என்று ஒருவன் இருந்தால் அவன் ராமனைப்போல் இருக்க வேண்டும் என்றும், மாதா பிதாக்கள், கோசலை, தசரதர் போல் இருக்க வேண்டும் என்றும், ப்ரஜைகள் என்றால் அயோத்தி ப்ரஜைகள் போல் இருக்கவேண்டுமென்றும், ராஜா என்றால் தசரதர் போல் இருக்கவேண்டும் என்றும், ஸகோதர்கள் என்றால் லக்ஷ்மணன், பரதன், ஸத்ருக்னன் போல் இருக்கவேண்டும் என்றும், நண்பன் என்றால் குகன், ஸுக்ரீவன் போல் இருக்கவேண்டும் என்றும், பத்னி என்றால் ஸீதையைப் போலவும், கணவன் என்றால் ராமனைப்போலவும், எதிரி என்றாலும் கூட ராவணனைப் போலவும் இருக்கவேண்டும் என்று ராமாயணத்தில் காட்டப்படுகின்றது.

இந்த ராமாயணத்தில் ஸீதைக்கு, அதாவது பெண்களுக்கு அக்னி பரிக்ஷை செய்யச் சொன்னது மூலமாகவும், கர்ப்பவதியாக இருக்கும்பொழுது அவளை வால்மீகி ஆஶ்ரமத்திற்கு கொண்டு விட்டதன் மூலமாகவும் பல அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக பல கருத்து, ஆஸ்திகர்களுக்கும் உள்ளது. இதைப்பற்றி அடுத்த இதழில் பார்ப்போம்.

(தொடரும்)

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 40

*கோபமில் குணத்தோய் ......*

உலக வாழ்க்கையையே வாழ முடியாதவர்கள் ஒருக்காலும் துறவியாக முடியாது. துறவு வாழ்க்கை என்பதும் தெய்வீகம் என்பதும் உலக வாழ்க்கையிலிருந்து தப்பித்துக் கொள்ள நினைப்பவர்களுக்கு தோல்வியாகவே அமையும். சிறிதளவே கல்வி அறிவுடையவன் தன்னை பலபேர் முன்னிலையில் படித்தவன் போல் காட்டிக் கொள்ள ப்ரியப்படுகின்றான். நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பல தருணங்களில் தம்மை தன்வந்தவர்களாக காட்டிக்கொள்ள ஆசைப்படுகின்றார்கள். அதாவது மனிதனுடைய ஸ்வபாவமே தன்னிடம் உள்ள அல்ப விஷயத்தைகூட மிகவும் பெரியதாக ப்ரகடன படுத்திக்கொள்ள விருப்பம் உள்ளதாக இருக்கிறது.

அதுபோல், ஸாதனைகளில் அல்ப ஸித்தி அடைந்தவர்களும் அல்ப வைராக்யம் ஸித்தித்தவர்களும் கூட தனக்கு பூர்ண வைராக்யம் ஏற்பட்டுவிட்டது போலவும் பூர்ண ஸித்தி ஏற்பட்டுவிட்டது போலவும் நடிக்க முயல்கின்றார்கள். இவர்களைச் சுற்றி ஒரு துதிபாடும் கூட்டமும் ஏற்பட்டுவிட, நாளடைவில் தான் நடிக்கின்றோம் என்ற இதுநாள் வரையில் இருந்த பச்சாதாபமும் போய், தன்னை மிகவும் உயர்ந்தவனாகவும், பூர்ணனாகவும் அஹங்காரத்தினால் நினைத்துக் கொள்கின்றான். இதன் விளைவுதான் இத்தனை அனர்த்தங்களும்.

ஒருவர், வாயினால் பேசாமல் இருப்பது மட்டும் மௌனமாகிவிடாது. மனதில் எந்தவிதமான எண்ணங்களும் உதிக்காமல் இருப்பதே மௌனம் ஆகும். எப்படி வாக்மௌனத்தைக் காட்டிலும் மனோமௌனமே சிறந்ததோ அதுபோல் சிலருக்கு வெளிப்படையாக கோபம் இருப்பது போல் தோன்றினாலும் அவர்களிடம் கோபமே இராது. சிலருடைய கோபம் வெளிப்படாமல் இருப்பினும், மனதிலேயே கோப உணர்ச்சிகள் இருக்கலாம். நடைமுறை வாழ்க்கையிலேயே நாம் இதைப் பார்க்கலாம்.

சிலர், நம்மிடம் சிரித்துப் பேசி பலவிதமான உபசார வார்த்தைகளை கூறி நம்மை உபசரிப்பதுண்டு. யாராவது நம்மிடம் அவர் தங்களிடம் எவ்வளவு ப்ரியமாக உள்ளார். பலவிதங்களில் உங்களைக் கொண்டாடி உபசரிக்கிறார்களே என்று கூறுவார்களேயானால், நாம் உடனே, அதெல்லாம் வெளிவேஷம் என்று கூறுவோம். அதுபோல், மஹாத்மாக்கள் நம்மிடம் எவ்வளவு கோபித்துக்கொண்டாலும் நமக்கு அவரிடம் அப்ரியமோ த்வேஷமோ வருவதில்லை. நம்முடைய மந்த புத்திக்குக் கூட அவர் வெளிப்படையாக கோபிப்பதுபோல் தோன்றினாலும் அந்தரங்கத்தில் நம்மிடம் வைத்திருக்கும் வாத்ஸல்யமானது புரிய வருகின்றது. ஆகவே கோபம், காமம், பயம் இவைகளெல்லாம் மனது ஸம்பந்தப்பட்ட விஷயங்களே தவிர ஸரீரஸம்பந்தப்பட்ட விஷயங்கள் ஆகாது.

இவ்விஷயங்களில் மனதை செலுத்தாமல் ஒருவனால் காமத்தையோ, கோபத்தையோ, பயத்தையோ வெளிப்படுத்த முடியுமானால், அவைகளை செய்தும் அவன் செய்யாதவனே. ஆகவே, மஹாத்மாக்கள் லோக அனுக்ரஹத்திற்காக கோபம், காமம், பயம் இவைகளை எடுத்துக் கொள்வதும் உண்டு. ஆதிஶங்கர பகவத்பாதாள் இதுபோல்தான் பரகாய ப்ரவேசமாக ஒரு ராஜாவின் ஸரீரத்தில் புகுந்து காமஸூத்ரத்தை அருளிச் செய்தார். இதுபோலவே ஶ்ருங்கார காவ்யமான ஸ்ரீ ஜயதேவரின் அஷ்டபதியிலும் ராதா க்ருஷ்ணயுகள ஸம்பந்தமான ஶ்ருங்கார ரஸங்கள் வெளிப்படினும் இவை லோகாயதமான காமமாகாது. காமம் நசிந்து போன காமமாகும்.

(தொடரும்)

தொகுப்பு : **முரளீதரதாஸன்**

எந்த தெய்வீக ஸ்தாபனங்கள் அதிகாரத்திற்கும் பணத்திற்கும் ஒரு மையமாக அமைகின்றதோ, குறுகிய காலத்திற்குள் அந்த அதிகாரமும், பணமுமே அந்த தெய்வீக ஸ்தாபனங்களை அழித்துவிடும்.

**- விதேச தத்துவ ஞானி**

# செய்திகள்

### நவம்பர் 1-ந் தேதி ப்ருந்தாவன த்வாதஸீ

சென்னை ப்ரேமிகபவனத்தில் வைதீக முறைப்படி துளஸீ கல்யாணம் நடைபெற்றது. அஷ்டபதிகள் பாடப்பட்டன.

சென்னை ஆழ்வார்பேட்டை, ஶ்ருங்கேரி மடத்தில் யாக்ஞவல்கியர் ஸமிதியில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்துகொண்டார்கள்.

### நவம்பர் - 3-ந் தேதி - ராஸ பூர்ணிமா

சென்னை ப்ரேமிகபவனத்தில் அஷ்டபதி பஜனை நடைபெற்றது.

### நவம்பர் 6-ந் தேதி முதல் 12-ந் தேதி வரை

சென்னை ப்ரேமிகபவனத்தில் பாகவத ஸப்தாஹம் நடைபெற்றது.

### நவம்பர் 14-ந் தேதி ஏகாதஸீ

சென்னை ப்ரேமிக பவனத்தில் மாலை 7 மணி முதல் 9 மணிவரை பஜனையும் இரவு 9 மணி முதல் 11 மணி வரை திவ்யநாமமும் நடைபெற்றது.

### நவம்பர் 15-ந் தேதி

திருவையாறு M.R.V. வேத தர்ம ஸபா சார்பில், சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில், 7, ஸ்ரீ ஆனந்தலக்ஷ்மி மந்திர், ஸ்ரீபாஸ்கர ப்ரகாச ஆஶ்ரமத்தில், யஜுர்வேத கன பாராயணத்தை ஸ்ரீ ஸ்வாமிகள் துவக்கி வைத்தார்கள். இந்த கன பாராயணம் 1-1-99 வரை 48 நாட்களுக்கு பிற்பகல் 2.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை நடைபெறுகிறது.

### நவம்பர் 18-ந் தேதி - கங்காகர்ஷண அமாவாஸ்யை

சென்னை ப்ரேமிகபவனத்தில் காலையில் அன்னதானம் நடைபெற்றது. மாலையில் திவ்யநாமம் நடைபெற்றது.

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

**டிசம்பர் 3-ந் தேதி விஷ்ணுதீபம்**

சென்னை ப்ரேமிகபவனத்தில் தீபோத்ஸவம் நடைபெறும்.

**டிசம்பர் 15-ந் தேதி**

சென்னை ப்ரேமிகபவனத்தில் ஸ்ரீ மஹாபெரியவாளின் ஆராதனை நடைபெறும்.

**டிசம்பர் 16-ந் தேதி முதல் ஜனவரி 15-ந் தேதி வரை**

சென்னை ப்ரேமிகபவனத்தில் தினமும் காலை 5 மணிக்கு பெருமாளுக்கு தனுர்மாத பூஜை நடைபெறும்.

**டிசம்பர் 16-ந் தேதி முதல் 25-ந் தேதி வரை**

சென்னை ப்ரேமிகபவனத்தில் தினமும் மாலை 6 மணிக்கு அத்யயன உத்ஸவம் நடைபெறும்.

**டிசம்பர் 20-ந் தேதி**

திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தஸாரதி கோவிலில் காலை 4.30 மணிக்கு நகர ஸங்கீர்த்தனம் நடைபெறும்.

**டிசம்பர் 29-ந் தேதி - வைகுண்ட ஏகாதஸீ**

சென்னை ப்ரேமிகபவனத்தில் பரமபத வாசல் திறப்பு கருடஸேவை நடைபெறும். இரவு 7.00 மணிக்கு தி.நகர் புவனேஸ்வரி கல்யாண மண்டபத்தில் திவ்யநாம பஜனை நடைபெறும்.

**ஜனவரி 6-ந் தேதி முதல் 16-ந் தேதி வரை**

மும்பை மாதுங்கா, South Indian Bhajan Samaj-ல் ஸ்ரீ ஸ்வாமிகள் உபன்யாஸம் நிகழ்த்துகிறார்கள்.

**ஜனவரி 29, 30, 31-ந் தேதிகள்**

மயிலாப்பூர் ஸம்ஸ்க்ருத கல்லூரியில் ப்ரஸ்தானத்ரய பாஷ்ய பாராயண ஸதஸ் நடைபெறும்.

**பிப்ரவரி 3-ந் தேதி முதல் 8-ந் தேதி வரை**

சென்னை மேற்கு மாம்பலம், அயோத்யா மண்டபத்தில் நடைபெறும் மஹாஶிவராத்ரி வைபவத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்து கொள்கிறார்கள்.

மங்களானி பவந்து

# மதுரமுரளி

Registered as Newspaper in India

Registrar of Newspapers for India
R. No. 62828/95

Regd. No. TN/MS(S)/714/98/
WPP No. TN/MS(S)/54/98

| வேணு : 4 | டிசம்பர் 1998 | கானம் : 5 |
|---|---|---|





Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar